# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 16 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2019.08.22 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

*நிதி*

**2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கும்; வெளிநாட்டு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் அறவீடொன்றை விதிப்பதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 17.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச.வ.- ஓ. 15/2019*

**2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தைத் திருத்துவதற்கும்; வெளிநாட்டு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் அறவீடொன்றை விதிப்பதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்கு மானதொரு சட்டம்.**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின்     ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

## *பாகம்* I

## **2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் VII ஐ திருத்துதல்**

*2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *இரண்டாயிரத்துப்பதினெட்டாமாண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு, "குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-*

*"குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம்" என்பது,*

*(அ) எந்த வாகனத்தின் முதலாவது பதிவானது 2019, யூலை 1 ஆந் தேதிக்கு முன்னர் செய்யப்படுகின்றதோ அந்த மோட்டார் வாகனமொன்று தொடர்பாக, எந்தப் பொருத்தப்பட்ட அல்லது பொருத்தப்படாத டீசல்*

மோட்டார் வாகனத்தின் உருளைக் கொள்ளளவு 2,300 சீ.சீ. யை விஞ்சுகின்றதோ அந்த ஏதேனும் பொருத்தப்பட்ட அல்லது பொருத்தப்படாத மோட்டார் வாகனம் அல்லது எந்தப் பெற்றோல் மோட்டார் வாகனத்தின் உருளைக் கொள்ளளவு 1,800 சீ.சீ. யை விஞ்சுகின்றதோ அந்தப் பெற்றோல் மோட்டார் வாகனம் ஒன்று அல்லது எந்த மின்சார வாகனத்தின் என்ஜின் மோட்டார் சக்தி 200 கிலோவோட்டை விஞ்சுகின்றதோ அந்த மின்சார வாகனம் ஒன்று என்று பொருளாகும். ஆனால், எந்த இரட்டை நோக்க பெற்றோல் மோட்டார் வாகனத்தின் உருளைக் கொள்ளளவு 2,200 சீ.சீ. யை விஞ்சாதுள்ளதோ அந்த இரட்டை நோக்க பெற்றோல் மோட்டார் வாகனத்தை, இரட்டைநோக்க மின்சார மோட்டார் வாகனத்தை, ஒரு வானை, ஒரு தனிக் கப் வண்டியை அல்லது ஒரு பார வண்டியை உள்ளடக்காது;

(ஆ) எந்த வாகனத்தின் முதலாவது பதிவானது 2019, யூலை 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் செய்யப்படுகின்றதோ அந்த வாகனமொன்று தொடர்பாக, ஏதேனும் பொருத்தப்பட்ட அல்லது பொருத்தப்படாத மோட்டார் வாகனம் என்று பொருளாகும். ஆனால், (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட ஒத்திசைவாக்கப்பட்ட பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்கள் என்பவற்றின்கீழ் இனங்காணப்பட்டவாறு, ஒரு வானை, ஒரு தனி கப் வண்டியை, ஒரு மோட்டார் சைக்கிளை, ஒரு மோட்டார் முச்சக்கரவண்டியை, ஒரு மோட்டார் நோயாளர் வண்டியை, ஒரு மோட்டார் பிணவண்டியை, ஒரு லொறியை, ஓர் உழவியந்திரத்தை, ஒரு கையுழவியந்திரத்தை, ஓர் இழுவை வண்டியை அல்லது (இரட்டைக் கப் வண்டியொன்று தவிர) பண்டங்களை இடம்பெயர்ப்பதற்கான ஏதேனும் மோட்டார் வாகனத்தை உள்ளடக்காது.".

## பாகம் II

### வெளிநாட்டு வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களின்மீது அறவீடொன்றை விதித்தல்

இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதி.

**3.** (1) இச்சட்டத்தின் இப்பாகம், (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் ''நியமிக்கப்பட்ட தேதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழான கட்டளையானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு அதன் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அங்கீகார தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

வெளிநாட்டு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் மீது அறவீடு ஒன்றை விதித்தல்.

**4.** (1) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும் இலங்கைக்கு வெளியேயுள்ள ஆளொருவருடன், இலங்கைக்கு வெளியே அத்தகைய ஆளிடமிருந்து எவையேனும் பண்டங்களை அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதற்குக் கொடுப்பனவு அட்டையொன்றின் ஊடாகக் கொடுக்கல்வாங்கல் ஒன்றைப் பூர்த்திசெய்துள்ள ஒவ்வோராளிடமிருந்தும் (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் ''அறவீடு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "வெளிநாட்டு வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களின்மீதான அறவீடு" எனவழைக்கப்படவேண்டிய அறவீடொன்று விதிக்கப்படுதல் வேண்டும்.

(2) அவ்அறவீட்டின் வீதமானது, (1) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் கொடுக்கல்வாங்கலுக்காக இலங்கைக்கு வெளியே அனுப்பப்பட்ட பணத்தொகையின்மீது 3.5 சதவீதமாகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவொரு கொடுக்கல் வாங்கலுக்காக இலங்கைக்கு வெளியே அப்பணத்தொகையை அனுப்பும் நேரத்தில், அறவீடானது, அத்தகைய ஏதேனும் பணத்தொகையைக் கைமாற்றும் ஒவ்வொரு நிதி நிறுவனத்தினாலும் சேகரிக்கப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் மாதத்தினுள் ஏதேனும் நிதிநிறுவனத்தினால் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணத் தொகைகளின் கூட்டுமொத்தம், இயைபான மாதத்தை அடுத்துப்பின்வரும் மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் ஆணையாளர்-தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) நிதிநிறுவனமொன்று, அத்தகைய நிதிநிறுவனத்தின் ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும், அந்நிதியாண்டு முடிவடைவதிலிருந்து ஆறு மாதங்களைக்கொண்ட காலப்பகுதி யொன்றினுள் ஆணையாளர்-தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும், முறையிலும், அத்தகைய இணைப்புக்களுடன் சேர்த்து அத்தகைய தகவல்களைக் கொண்டுள்ளதுமான விபரத்திரட்டொன்றை ஆணையாளர்-தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(6) இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அறவீட்டைச் சேகரிப்பதற்கும் அவசியமாகவிருக்கக்கூடிய ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

அறவீட்டை செலுத்து வதிலிருந்து விலக்களிக்கப் படுதல்.

**5**. அமைச்சர், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கொடுக்கல்வாங்கலை, அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைக்கமைய, 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கலாம்.

**6.** (1) இப்பாகத்தின்கீழான அறவீட்டைச் செலுத்துவதற்கு உட்பட்டதாகவுள்ள ஏதேனும் நிதிநிறுவனம் 4 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக இப்பாகத்தின்கீழான அவ் அறவீட்டைச் செலுத்துவதற்குத் தவறுமிடத்து, அத்தகைய நிதிநிறுவனம் இச்சட்டத்தின்கீழ் தவணைதவறியதாகக் கருதப்படுதல் வேண்டும். அறவீட்டைச் செலுத்துவதில் தவணை தவறுதல்.

(2) இரண்டாயிரத்துப்பதினேழாமாண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் IX ஆம் அத்தியாயம், XI ஆம் அத்தியாயம், XII ஆம் அத்தியாயம், XIII ஆம் அத்தியாயம், XIV ஆம் அத்தியாயம், XV ஆம் அத்தியாயம், XVI ஆம் அத்தியாயம், XVII ஆம் அத்தியாயம் மற்றும் XVIII ஆம் அத்தியாயம் என்பவற்றின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய எவரேனும் தவணைதவறிய நிறுவனத்துக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**7.** இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய - பொருள்கோடல்.

''ஆணையாளர்-தலைமையதிபதி'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

''விதிப்பனவு அட்டை'' என்பது, நீடித்த ஏதேனும் கடனின்றி, அட்டை வைத்திருப்பவரினால் பயன்படுத்தப்பட்ட கடன், வழங்குநரினால் குறித்துரைக்கப்பட்டவொரு தேதியன்று அல்லது அதன்முன்னர் முழுமையாகக் கொடுத்துத் தீர்க்கப்படவேண்டியவிடத்து வழங்குநரினால் அட்டைவைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட தொடர் கடனொன்றை உட்படுத்துகின்றவொரு கொடுப்பனவு அட்டை என்று பொருளாகும்;

"கடன் அட்டை" என்பது, பயன்படுத்தப்பட்ட கடன் முழுமையாக அல்லது பகுதியளவில் ஒரு குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் கொடுத்துத் தீர்க்கப்படமுடியுமானதாகவுள்ளவிடத்து வழங்குநரினால் அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட தொடர் கடனொன்றை உட்படுத்துகின்றவொரு கொடுப்பனவு அட்டை என்று பொருளாகும்;

''பற்று அட்டை'' என்பது, அட்டைவைத்திருப்பவரினது கணக்கிலிருந்து நேரடியாகப் பற்றுவைப்பதன்மூலம், காசை மீளப்பெறுவதற்கு அல்லது பண்டங்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்காகக் கொடுப்பனவுகளை நிறைவேற்றுவதற்கு அல்லது அத்தகைய இருநோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படக் கூடிய ஒரு கொடுப்பனவு அட்டை என்று பொருளாகும்;

"நிதிக் கம்பெனி" என்பது, 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு நிதிக் கம்பெனி என்று பொருளாகும்;

"நிதி நிறுவனம்" என்பது, உரிமமளிக்கப்பட்டவொரு வர்த்தக வங்கி, உரிமமளிக்கப்பட்டவொரு விசேடித்த வங்கி அல்லது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டவோர் உரிமத்தின் அதிகாரத்தின்கீழ் கொடுப்பனவு அட்டைகளின் வழங்குநர் அல்லது கொடுப்பனவு அட்டைகளின் நிதிசார் கொள்ளுநர் என்ற தொழிலில் ஈடுபட்டுள்ளவொரு நிதிக் கம்பெனி என்று பொருளாகும்;

''நிதிசார் கொள்ளுநர்'' என்பது, ஒரு கொடுப்பனவு வழிவகையாக அட்டைவைத்திருப்போரின் கொடுப்பனவு அட்டைகளை ஏற்றுக்கொள்வதற்கு மூன்றாந்திறத்தவர் களுடன் ஒழுங்கேற்பாடுகளைச் செய்கின்றவரும் அட்டைவைத்திருப்பவரினால் கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் பெறுமதியை அந்த மூன்றாந் திறத்தவர்களுக்கு மீளளிப்புச் செய்கின்றவரும் அல்லது அட்டைவைத்திருப்போரினால் பெற்றுக்

கொள்ளப்பட்ட காசு முற்பணங்களுக்காக அத்தகைய மூன்றாந்திறத்தவர்களுக்கு மீளளிப்புச் செய்கின்றவரும் அல்லது அத்தகைய இரு பணிகளையும் புரிகின்ற வருமான எவரேனுமாள் என்று பொருளாகும்;

''வழங்குநர்'' என்பது, ஒரு கொடுப்பனவு அட்டையை வழங்குவதன் மூலம் அட்டைவைத்திருப்பவருடன் ஒப்பந்த முறையிலானவொரு தொடர்பைச் செய்து கொள்கின்ற ஓர் உருவகம் என்று பொருளாகும்;

''உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி'' என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு வர்த்தக வங்கி என்று பொருளாகும்;

''உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி'' என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு விசேடித்த வங்கி என்று பொருளாகும்;

''கொடுப்பனவு அட்டை'' என்பது, ஒரு பற்று அட்டை, கடன் அட்டை, விதிப்பனவு அட்டை அல்லது பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டை என்று பொருளாகும்;

''ஆள்'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

''பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டை'' என்பது, ஒரு கொடுப்பனவு வழிவகையாகப் பயன்படுத்தப்படமுடியுமான சேமிக்கப்பட்ட பெறுமதிக்கான அணுக்கத்துடனானவொரு கொடுப்பனவு அட்டை அல்லது வேறேதேனும் உபாயம் என்று பொருளாகும் என்பதுடன் கொடுப்பனவுக் கடப்பாடுகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படமுடியுமான ஓர் அட்டையின் வழங்குநருக்கான அத்தகைய அட்டையை உள்ளடக்காது.

## பாகம் III

### பொது

**8.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப் படுகின்ற அல்லது இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப் படுகின்றதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். *ஒழுங்குவிதிகள்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அது வெளியிடப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் உரியமுறையில் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**9**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்